உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No. 665/2023

| | | |
|---|---|---|
| பெயர் | : | அழகம்மாள்(அ.சா.7) |
| தகப்பனார் பெயர் | : | |
| கணவர் பெயர் | : | பிச்சை |
| வயது | : | |
| கிராமம் | : | அரும்பனூர் |
| வட்டம் | : | மதுரை கிழக்கு |
| தொழில் | : | வேலையில்லை. |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

06.08.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். கணேசன், வீரம்மாள், வேட்டை, பிரபு பாலமுருகன் அனைவரையும் தெரியும். சோனை, சேதுராமன், சுரேஷ் ஆகியோரையும் தெரியும் அனைவரும் எங்கள் ஊர்க்காரர்கள் தான். சண்டையென்று சொன்னார்கள் ஆனால் சண்டையை பற்றி எனக்கு தெரியாது. அ.சா.5 - மாரிக்கண்ணன் என்னுடைய மகன் ஆவார். சண்டை நடந்ததே எனக்கு தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 26.06.2017ம் தேதி இரவு சுமார் 7மணியளவில் நானும், எனது மகன் மாரிக்கண்ணனும் வீட்டில் இருந்த போது, கணேசன்(3வது எதிரி), மற்றும் அவரது மகன்கள், உறவினர்கள் மொத்தம் 13 பேரும் சேர்ந்து சேதுராமன், அவர் தம்பி சுரேஷ், சோனை, ஜெகதீஷ் ஆகிய 12 நபர்களும் சேர்ந்து என் வீட்டருகே ஒருவருக்கொருவர்கையில் வைத்திருந்த கம்பி, கல்

மற்றும் கம்பு போன்ற ஆயுதங்களால் ஒருவொருக்கொருவர் தாக்கி கொண்ட சம்பவத்தை நானும் எனது மகன் மாரிக்கண்ணனும் பார்த்துவிட்டு மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்சில் ஏற்றுவதற்கு உதவி செய்துவிட்டு, கணேசன் கொடுத்த புகாரிலும் சேதுராமன் கொடுத்த புகாரிலும் மேற்படி சம்பவங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டு, அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.06 18:28:02 +0530

Sub Judge

Melur